ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம் – 7 | பாஞ்சஜன்யம்<br>செப்டம்பர் 2006-88 | ஒலி – 8 |
|---|---|---|


## அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழக அரசின் அவசர சட்டத்திற்கு உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத்தடை

16.07.2006 அன்று தமிழக அரசு 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தின் 55ஆவது பிரி வைத் திருத்தி அவசரச்சட்டம் ஒன்றினைப் பிறப்பித்தது. இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து, ஆதிசைவ சிவாசார்யர்கள் நலச் சங்கமும், தென்னிந்தியத் திருக்கோயில் அர்ச்சகர்கள் பரி பாலன சபையினரும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கை ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள் அவசரச் சட்டத்தின் எட்டாவது பிரிவிற்கு 14.08.2006 அன்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தனர். இந்த எட்டாவது பிரிவில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கலாம் என்ற திருத்தம் அடங்கியிருந்தது. 21.08.2006 திங்கட்கிழமை இந்த அவசரச் சட்டத்தின் அடிப்படையில் தமிழக சட்டசபையில் மசோதா ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய அறநிலையத்துறை அமைச்சர் அவசரச் சட்டத்தின் எட்டா வது பிரிவு நீக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

இதன்படி அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வாய்ப் பில்லை என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. உச்சநீதி மன்றத்தின் உத்தரவு இடைக்கால உத்தரவாய் அமைந்துள்ள போதிலும் தாம் நீதிக்குத் தலை வணங்குவதாக மாண்புமிகு முதலமைச்சர் தமிழக சட்ட சபையில் அறிவித்தார்.

“வேதங்களே பிறப்பால் சாதி எதுவும் இல்லையென்றும், அனைவரும் சமம் என்றும் உறுதியாக சொல்லிவிட்டதற்குப் பிறகும்; வேதங்களின் பெயரால் இன்றைய விஞ்ஞான யுகத் திலும்கூட சாதிப்பிரிவினைகள் பேசப்படுவதும், மேல்சாதி – கீழ் சாதி என்று வேறுபடுத்தப்படுவதும்; ஒரு சாதியினர் செய்யக்கூடிய அர்ச்சகர் பணியை மற்றொரு சாதியினர் செய்யக்கூடாது என்று தடுப்பதும்; இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் சட்ட அங்கீகாரம் தேடுவதும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது என்பது நமக்கெல்லாம் மிகுந்த வேதனை தரக்கூடிய செய்தியாகும்” என்று மாண்புமிகு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சரின் வேதனை நமக்குப் புரிகிறது. இதற்கு ஒரே வழி ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் “**நாட்டில் சாதிகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. தமிழ்நாட்டில் ஆண் சாதி, பெண் சாதி என இரண்டைத் தவிர மூன்றாவது சாதியில்லை. கல்வித்துறை மற்றும் வேலைவாய்ப்புகளில் அனைத்து சாதி யினருக்கும் சம உரிமை வழங்கப்படும்**” – என அறிவிக்கலாம்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடிமக்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பின் தங்கியோர், முற்படுத்தப்பட்டோர் போன்ற பிரிவுகளை ஒழித்து சாதியற்ற ஓர் உன்னத சமுதாயத்தை இவர் உருவாக்க முற்படலாமே! எதற்கெடுத்தாலும் நீதிமன்றத்தை நாடுகிறார்கள் என்று மேலும் அங்கலாய்க்கிறார் முதலமைச்சர்.

“சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகாமல், புதுடெல்லி யில் உச்சநீதிமன்றத்தை அணுகிவிட்டார்களே!” என்று புலம்பு உள்ளார். உச்சநீதிமன்றம் இந்த வழக்கை ஏற்றுக்கொண்டு ஆணை

பிறப்பித்தபோதே அந்தச் செயல் இந்திய அரசியல் சாஸனத்திற்கு உட்பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரியாதா? எத்தனையோ வழக்குகளில் இவர்கள் உச்சநீதி மன்றத்தை நேராக அணுகவில்லையா? தம்முடைய முடிவிற்கு உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளது என்பதால் உள்ளம் குமுறி ஏதேதோ பேசுகிறார்.

உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவைத் தாமே முன்வந்து நிரந்தரத் தடையாக மாற்றிக் கொண்ட அவருடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறோம்.

★★★

## *சிக்கில் கிடாரம் திருக்கோயிலுக்கு ஆபத்து!*

இராமநாதபுரத்திலிருந்து திருச்செந்தூர் செல்லும் பேருந்துத் தடத்தில் அமைந்துள்ளது சிக்கில் கிடாரம் என்னும் திருத்தலம். கூரகுலோத்தம தாஸர் திருவடிகளில் அர்த்த விசேஷங்களைக் கேட்பதற்காகத் திருவாய்மொழிப்பிள்ளை பல ஆண்டுகள் எழுந்தருளியிருந்த பெருமைபடைத்த திருத்தலமாய் விளங்குவதோடுமட்டுமல்லாமல் கூரகுலோத்தம தாஸருடைய திருவரசும் இங்கே அமைந்துள்ளது. ஸ்ரீமணவாளமாமுனிகள் இந்தத் தலத்தில்தான் அவதரித்தார் என்பதும் ஒருசாரார் கருத்து.

சென்ற 2002ஆம் ஆண்டு ஸ்ரீசுந்தரராஜப்பெருமாள், ஸ்ரீமணவாளமாமுனிகள் ஆகியோருடைய திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்யப்பட்டு தற்போது அவை பொலிவுடன் விளங்கிவருகின்றன. இராமநாதபுரம் திருச்செந்தூர் வழித்தடம் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கப்பட்டு வருகிறது. வழித்தடத்தை அகலப்படுத்துவதற்காகத் திருக்கோயிலின் மேற்கு மற்றும் வடக்குப்புற மதிட்சுவர்கள் இடிக்கப்பட்டு ஆகமவிதிப்படி கட்டப்பட்ட திருக்கோயிலின் சில பகுதிகள் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றம்பெற உள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்பு விஜயவாடாவிலிருந்து

ஹைதராபாத்திற்குச் செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலை யாக அறிவித்து விஜயவாடாவிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இடத்தில் ஒரு மசூதியின் ஒரு பக்க சுவரை நீக்கிவிட்டு நெடுஞ்சாலை அமைக்க முற்பட்டனர் அதிகாரிகள்.

அந்த விரிவாக்கத்தை மேற்கொண்ட அதிகாரிகள் அந்த மசூதியின் ஒரு கல்லை எடுத்தவுடன் சுமார் 10,000 முகம்மதியர்கள் அந்த இடத்தில்கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். தேசிய நெடுஞ்சாலை அதிகாரிகள் தங்கள் சாலை விரிவாக்க முயற்சியை அந்த இடத்தில் மேற்கொள்ளாது வேறுஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து புதிதாகச் சாலையை அமைத்தனர். இந்த நிகழ்ச்சி முகம்மதியரிடையே நிலவி யுள்ள ஒற்றுமையையும் உணர்ச்சி வெளிப்பாட்டையும் காட்டுகிறது.

சிக்கில் கிடாரம் திருக்கோயில் ஸ்ரீவானமாமலை மடத்தின் நேரடி நிர்வாகத்திற்கு உட்பட்டதொரு கோயிலாகும். சென்ற இரண்டு ஆண்டுகளாகவே திருமதிள்களை அப்புறப்படுத்தும் முயற்சியில் அரசு அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட்டு வந்தனர். தற்போது சாலை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இராமநாதபுரம் வழக்கறிஞர் திரு.சடகோபன் முன்சீப் கோர்ட்டில் திருமதிள்கள் இடிக்கப்படுவதை எதிர்த்துத் தடை உத்தரவு வாங்கி யுள்ளார். பொதுநலனைக் காரணங்காட்டி அரசு அதிகாரிகள் மேல் முறையீடு செய்து அந்தத் தடை உத்தரவை நீதிமன்றம் விலக்கிக் கொள்ளும் படி செய்திடுவர்.

ஸ்ரீவைஷ்ணவர்களிடையே திவ்யதேசங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வுகள் அற்றுப்போய்விட்டன. இத்தகைய அத்துமீறல்களை யாரும் கண்டுகொள்வதில்லை. அப்படியே சிலர் அத்துமீறல்களை எதிர்க்க முன்வந்தாலும் செல்வாக்குப் படைத்த பிரமுகர்கள் இணைந்து செயல்படுவதில்லை. இவற்றின் விளைவாக நமது திவ்யதேசங்களுக்கும், புகழ்பெற்ற புராதனச் சின்னமாகிய மடங்களுக்கும் ஏற்படும் ஆபத்துக்களை நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆன்மீகப்பிரசாரம் அல்லது குணானுபவம் பண்ணிவைப்பவர்கள் தாங்கள் ஆற்றும் சொற்பொழிவுகளின் போது, இத்தகைய ஆபத்துக்களைப் பற்றி பேசக்கூடாது –

என்றதொரு ‘தடையை’ தமக்குத் தாமே விதித்துள்ளனர்.

ஸ்ரீவானமாமலை திவ்யதேசத்தில் ஒன்றாவது பட்டம் ஜீயர் தொடக்கமான ஜீயர்களுடைய திருவரசிற்கு தேசிய நெடுஞ்சாலைப் பிரிவினரால் ஆபத்து ஏற்படஉள்ளது. இவற்றையெல்லாம் தனிநபர் விருப்புவெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு சிந்தித்துச் செயல்பட வேண்டும். இன்றைய தினம் சமூகத்தில் செல்வாக்குப் படைத்தவர்களாய்த் திகழ்வோர் இவற்றையும் பிரச்சினைகளாக எண்ணித் தீர்வுகாண முயலவேண்டும். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வர்த்தமான வானமாலை ஜீயர் ஸ்வாமி இத்தகைய அத்துமீறல் களுக்கு எதிராக அவர் எடுத்துள்ள நடவடிக்கைகளை அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் தெரிவித்திட வேண்டும். ஏனெனில் சிக்கில்கிடாரம் திருக்கோயிலும், ஸ்ரீவானமாமலை ஜீயர்களுடைய திருவரசும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் பொதுச் சொத்துக் களாகும். இவைகளுக்கு ஓர் ஆபத்து ஏற்படுமாயின் அவை சமூகத்திற்கு இழைக்கப்பட்ட தீங்குகளாகவே கொள்ளவேண்டும். நம்மிடையே என்று விழிப்புணர்ச்சி ஏற்படுகிறதோ அன்றுதான் இத்தகைய அத்துமீறல்களுக்குத் தீர்வு காணஇயலும். ★

## ஸ்ரீவைஷ்ணவ மரபுகள், கோட்பாடுகள் வளர்வதற்கும், அதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்குமான - கலந்தாய்வு

சென்னை பசும்பொன் தேவர் திருமண மண்டபத்தில் 27.08.2006 வெள்ளிக்கிழமை, சென்னை, ஸ்ரீபாஷ்யகாரா சாரிடபிள் டிரஸ்டின் ஆதரவில் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், நாச்சியார் திருமொழி *(பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம் மற்றும் புத்தூர் ஸ்வாமியின் விவரணத்துடன் கூடியது)* ஆகிய இரு நூல்களின் வெளியீடு நடைபெற்றது.

ஆழ்வார் திருநகரி ஸ்ரீஎம்பெருமானார் ஜீயர் மடத்தின் 40ஆவது பட்டம், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி தேவநாத ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி நூல்களை வெளியீடு செய்து மங்களாசாஸனம்

செய்தருளினார். அன்பர்கள் பலர் கலந்துகொண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸமூகம் எதிர்கொண்டுள்ள ஆபத்துகளைக் குறித்துப் பேசினர். பாஞ்சஜன்யம் ஆசிரியர் தம்முடைய கருத்துக்களை இந்தக் கலந்தாய்வின்முன் வைத்தார். அதில் ஒன்றுவைணவ நூல்களுக் கான பொது நூலகம் அமைத்தலும், அந்த நூலகத்திற்கான நூல்களை சேகரிக்கும் பணியுமாகும்.

I. ஸ்ரீவைஷ்ணவ மதத்தைச்சார்ந்த நூல்கள் ஆயிரக்கணக் கில் உள்ளன. அவை பல்வேறு கால கட்டங்களில் பதிப்பிக்கப் பட்டுள்ளன. தற்போதைய சூழ்நிலையில் வைணவக் கோட் பாடுகள் தொடர்பான நூல்கள் முழு அளவில் மறுபதிப்பு காண வில்லை. கிடைத்தற்கரிய நூல்கள் பல ஆங்காங்கே தனி நபர்களுடைய சொந்த உபயோகத்திற்காக ஏற்படுத்தப்பட்ட நூலகங்களில் தஞ்சம் கொண்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் வைணவ நூல்கள் அதிக அளவில் சேமித்துவைக்கப்படுவதில்லை. இதே நிலைதான் மற்றைய தனி நூலகங்களான – அடையாறு நூலகம், ரோஜா முத்தையா நூலகம் போன்றவைகளிலும் காணப்படுகிறது.

தனி நபர் வசம் இருக்கும் நூல்களும், அவருடைய காலத்திற்குப் பிறகு சந்ததியினரால் பேணிபாதுகாக்கப்படும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது.

சிலரிடம் உள்ள நூல்கள் காலத்தின் முதுமையாலும், கரையான்களுடைய அகோரப் பசியாலும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. சில புத்தகங்களைக் கையில் எடுத்தால் அப்பளம்போல் நொறுங்கித் துகள்களாகின்றன. பல திவ்யதேசங்களில் அரிய நூல்கள் பல தனி நபர்களுடைய நூலகங்களில் உள்ளன. **தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு நூல் இறப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.** நூல்கள் வாழ்ந்தால்தான் நம்கோட்பாடுகள் வளர்ச்சி அடையும். ஆகவே, நூல்களைப் படிமம் எடுப்பது, அவற்றை வகைப்படுத்துவது, அந்த

நூல்களின் பிரதிகளை வேண்டுவோர்க்கு ஒளி நகல் எடுத்துத் தருவது, அதிக நூல்களை இணைய தளத்தில் பதிவு செய்து அனைவரும் பயன்கொள்ள வகை செய்தல் போன்ற பணிகளைச் செய்திட மனித வளமும், பண பலமும் தேவை. மேலும், இந்த நூல்களை சென்னை, காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், திருவரங்கம் ஆகிய ஸ்தலங்களில் ஏதேனும் ஓரிடத்தில் அதற்குரிய ஓர் கட்டிடத்தில் வகைப்படுத்தி மேற்பார்வையாளராக ஒருவரை நியமிக்கவேண்டும்.

***இதற்கானத் தீர்வினை உடனடியாக செயல்படுத்துவதாக ஸ்ரீமான் ப்ரஸந்நவேங்கடேச சதுர்வேதி மேடையிலேயே வாக்களித்தார். அதன்படி ஸம்ஸ்க்ருதத்தில் நன்கு தேர்ச்சிப்பெற்ற இருவரைக் கொண்டு இந்தப்பணி (7.8.2006) திருவரங்கத்தில் தொடங்கப்பட்டுள்ளது.***

*(பழைய புத்தகங்களை வைத்துள்ளோர் எங்களுக்குத் தெரிவித்தால், நாங்களே அதைப் படியெடுத்துக்கொண்டு, அந்த நூல்களைத் திருப்பித் தந்துவிடுவோம்.)*

II. நமது திவ்யதேசங்களில் பல அத்துமீறல்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. இவற்றை உடனுக்குடன் நிர்வாகத்தின் பார்வைக்கு எடுத்துச்செல்லவேண்டியது இந்த சமூகத்தின் கடமையாகும். இதற்கென ஓர் உண்மை கண்டறியும் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார் பாஞ்சஜன்யம் ஆசிரியர்.

நமது திவ்யதேசங்கள் ஒரு காலத்தில் சீரும், சிறப்புடன் திகழ்ந்து வந்தன. நித்ய ஆராதனங்கள், அருளிச்செயல், வேதம் ஆகியவை எந்தக்குறைவுமின்றி நடைபெற்று வந்தன. மன்னர்களும், மனம் படைத்தோரும் பெருமளவில் நிலங்களையும் ஆபரணங்களையும் காணிக்கையாகத் தந்து கோயில்களின் பொருளாதார மேம்பாட்டை உயர்த்திக்கொண்டு சென்றனர். நாடு சுதந்திரம் அடைந்தபிறகு அனைத்து இந்துக் கோயில்களும், இந்துசமய அறநிலையத்துறையின் (Act XXII of 1959) நிர்வாகத்தின் கிழ் கொண்டுவரப்பட்டன. இறை நம்பிக்கை இல்லாதவர்கள் தர்மகர்த்தாக்களாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் செயல்

படத் தொடங்கினர். சமுதாயத்தில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களால் அவரவர்கள் செய்யவேண்டிய பணிகளைச் சரிவரச் செய்யாமல் அவை குறையத்தொடங்கின. பண வசூல் என்ற பெயரில் பூஜைக்குரிய நேரங்கள் குறைக்கப்பட்டன. பூஜை செய்வோருடைய ஆகம அறிவு மிகமிகக் குறைந்த அளவைநோக்கிச் சென்றன. எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்ற நிலை உருவாகியது. திருமடைப் பள்ளி கைங்கர்யம் சரியாக நடைபெறுவதில்லை. மரபுகளுக்கு மீறிய செயல்கள் தழைக்கத் தொடங்கின. நிர்வாகத்தில் உள்ளோரும் தமக்கு இடப்பட்ட பணிகளைத்தாண்டி 'குரங்கு அப்பம் பிரித்துத் தந்த' கதைபோல் நீதி வழங்குபவர்களாகத் தம்மைக் கூறிக்கொண்டு உள்துறை விவகாரங்களில் தலையிடலாயினர்.

விழாக்கள் அவற்றிற்கு உரிய முறையில் கொண்டாடப் படுவதில்லை. திருமஞ்சனத்திற்கும், அமுதுபடிகளுக்கும் உப யோகப்படுத்தப்படும் பொருள்கள் அனைத்தும் தரம் தாழ்ந்தவை யாகவே உள்ளன. மக்களுடைய கடவுள் நம்பிக்கையை முதலீடாகக் கொண்டு வசூல் வேட்டையில் ஈடுபடலாயினர். உதாரணத்திற்கு பல உபயதாரர்களிடமிருந்து பிரஸாதம் ஸமர்ப்பிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக் கொண்டபிறகு, அந்த உபயதார ருடைய அமுதுபடிகளாக புதிதாக ஏதும் ஸமர்ப்பிக்கப்படுவதில்லை. அந்த தெய்வத்திற்கு ஸமர்ப்பிக்கப்பட்டுவரும் பிரஸாத்தின் அளவை அதிகரிப்பதில்லை. இது ஒரு பச்சை துரோகம். இதை பொதுமக்களுக்கு தெரிவித்து, அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச்செல்லவேண்டும்.

திருக்கோயில்களில் அன்னதான திட்டம் முன்னாள் முதல்வர் செல்வி.ஜெயலலிதாவால் தொடங்கிவைக்கப்பட்டது. திருக்கோயில்களில் இன்னென்ன பதார்த்தங்களை உபயோகிக் கலாம், இன்னென்ன பதார்த்தங்களை உபயோகிக்கக் கூடாது என்று அறநிலையத்துறை ஆணையரால் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதிலும் திருவிண்ணகரப்பன் திருக்கோயில், ஆண்டாள் அரங்கமன்னார் திருச்கோயில் போன்ற பல கோயில் களில் அன்னதானமாக அளிக்கப்படும் உணவில் பூண்டு,

வெங்காயம், முருங்கைக்காய் போன்றவைகள் சேர்க்கப்படு கின்றன. ஆங்காங்கே கட்சியில் செல்வாக்கு படைத்தவர்கள் [வட்டங்களும், துண்டுகளும்] இந்த அன்னதானத் திட்டத்தைக் குத்தகைக்கு எடுத்து, பல தில்லுமுல்லுகளைச் செய்துவரு கிறார்கள்.

திருக்கோயில்களில் அன்னதானம் வழங்குவது என்பது நீண்டகால பழக்கவழக்கமாகும். ஆனால் அவை உணவுவிடுதிகள் போல் அன்றைய காலங்களில் செயல்படவில்லை. மேலும் திருக்கோயில்கள் பொழுதுபோக்குக் கூடங்கள் அல்ல. அங்கு உறையும் இறைவனுக்குப் படைத்திடாத [நைவேத்யம் செய்தி டாத] எந்தப் பொருளையும் கோயில் வளாகத்தில் உட்கொள்ளக் கூடாது. இது இந்து மதத்தின் மிக அடிப்படையான கோட்பாடாகும். இவையெல்லாம் இன்று காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

வருமானம் மிக்க கோயில்களிலிருந்து ஒரு பகுதி அரசாங் கத்திற்குப் கப்பமாக செலுத்தப்படுகிறது. பெரும்பாலும் இந்தப் பணம் அறம்சாராப் பணிகளுக்கே உபயோகப்படுத்தப்படுகிறது. இது அரசியல் சாசன விதி 27க்கு முரணானது. தமிழ்நாட்டுக் கோயில் களுக்குச் சொந்தமான நிலம் [நஞ்சை, புஞ்சை, மானாவாரி நிலங்கள்] 4,78,940 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இவற்றை உழுது பயன்பெறும் குத்தகை தாரரின் எண்ணிக்கை 1,03,205. கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களின் எண்ணிக்கை 20,046; அதில் குடியிருப்போர் 22,599 குடும்பங்கள். கோயி லுக்குச் சொந்தமான மனைகள் 33,627; அதில் குடியிருப்போர் 58,077. இந்தப் புள்ளிவிபரங்கள் தற்போது மாற்றம் அடைந் திருக்கக்கூடும். 2005ஆம் ஆண்டு இயற்றப்பட்ட Right to Information சட்டத்தின் துணை கொண்டு தற்போதைய நிலைமையை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். பல நிலங்கள் குத்தகை தாரர்களால் விழுங்கப்பட்டு அவற்றின் வருவாய் கோயில்களைச் சென்றடைவதில்லை. மாபெரும் மீட்புப்போர் தொடுக்கப்பட வேண்டும்.

ஒரு தனி நபர் எவ்வளவுதான் புள்ளிவிவரங்களைத்

தந்தாலும், அவற்றை நிர்வாகமோ அரசாங்கமோ கவனத்தில் கொள்வதில்லை. ஊடகங்களும் இதைக் கண்டுகொள்வதில்லை. சமூகத்தில் உயர் அந்தஸ்தில் இருப்போர் – அதாவது, ஓய்வுபெற்ற I.A.S., I.P.S. அதிகாரிகள், முன்னாள் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், பொது வாழ்க்கைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் – ஆகியோர் அடங்கிய குழு ஒன்றினை நியமித்து 10 தலைப்புகளில் தற்போதைய நிலைமையைக் கண்டறிந்து அதனை ஓர் அறிக்கையாக ஊடகங்கள் வழி வெளிப்படுத்தி அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுசெல்லவேண்டும். இதற்கான குழுவில் 5 நபர்கள் அங்கம் வகிக்கலாம்.

III. திருக்கோயில்கள் மற்றும் ஆசார்ய புருஷர்களைப் பற்றிய தகவல்கள் சேகரிப்பில் முக்கியத்துவம் குறித்துக் கீழ்க்கண்ட கருத்துக்களை முன்வைத்தார் ஆசிரியர்.

"பாண்டிய நாட்டில் 18 திவ்யதேசங்கள் உள்ளன. இவை தவிர அபிமான ஸ்தலங்களான கொந்தகை, ப்ரஹ்மதேசம் மன்னார் கோயில், ஆனைமலை நரஸிம்ஹப்பெருமாள், பிள்ளைலோகாசார் யர் திருவரசு அமைந்துள்ள கொடிக்குளம் போன்றவை அமைந் துள்ளன. மேலும், ஒவ்வொரு திவ்யதேசத்தைச் சுற்றிலும் உள்ள கிராமங்களில் புகழ்பெற்ற விஷ்ணுகோயில்களும் உள்ளன.

266 தலைப்புகளின் கீழ்க் கருத்தறிய, வினாத்தொடர் (questionnaire) தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் உதவிகொண்டு ஒரு திவ்யதேசத்தில் தகவல் களை சேகரிப்பதற்கு குறைந்தது 3 நாட்கள் ஆகும். அழகர்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற திவ்யதேசங் களில் இத்தகைய தகவல்களை சேகரிப்பதற்கு 4 நாட்கள் தேவைப் படலாம். பலரை அணுகி இதற்கான பதில்களைப் பெறவேண்டும். ஆங்காங்கே அர்ச்சாவதார எம்பெருமான்களையும், மண்டபங் களையும், அர்ச்சகர்களையும் மற்றைய கைங்கர்யபரர்களையும், ஆசார்ய புருஷர்களையும் புகைப்படம் எடுத்து இதற்கான பதில் களுடன் இணைக்கவேண்டும்.

தகவல்களை சேகரித்தபிறகு அவற்றை கணினியில் பதிவு செய்யவேண்டும். அதற்கு முன்னோடியாக தகவல்களை ஒழுங்கு படுத்துவதற்கு உரிய மென்பொருள் (Software) தயாரிக்கப் படவேண்டும். ***(பல்வேறு தலைப்புகளில் தகவல்களை ஒன்று சேர்த்து தனிப்புத்தகமாக ஸ்ரீபாஷ்யகாரா டிரஸ்டின் ஆதரவில் வெளியீடு செய்வதாக திரு.பிரஸந்ந வேங்கடேச சதுர்வேதி இசைவு தெரிவித்துள்ளார்.)*** அடிப்படை குறிப்புகள் ஏதும் நம்மிடம் இல்லாத ஒரு நிலையில் இதுபோன்ற செய்தி சேகரிப்பு நமக்குப் பல புதிய தவல்களைத் தந்திடும்.

இந்த விழாவின்போது வைணவ டி.வி.சேனல் பற்றிய முன்னோட்டக் குறுந்தகடு வெளியீடும் நடைபெற்றது.

*இதற்கான ஆயத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஸ்ரீவைஷ்ணவக் கோட்பாடுகளில் ஈடுபாடுடைய இளைஞர்கள் இருவர் மாதத் தொகுப்பு ஊதியத்தில் இந்தப் பணியைத் தொடங்க உள்ளார்கள். சுமார் மூன்று மாத காலத்தில் பாண்டிய நாட்டு திவ்ய தேசங்களைப் பற்றிய பல்வேறு செய்திகளைத் திரட்டலாம் என்று தற்போது திட்டமிட்டுள்ளோம்.*

★★★

